இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

மட்டம் - 04

**EPU4338– முன்பள்ளி மற்றும் ஆரம்ப வயதில் தமிழ்மொழி கற்பித்தல்**

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி:- 10.03.2024 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 03.30

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி I

1. தமிழ் மொழியின் அடிப்படை எழுத்துக்களை எண்ணிக்கையின் அடிப்படையில் வகைப்படுத்தி எழுதுக.

2. "சொல்" என்றால் என்ன என்பதை உதாரணத்துடன் முன்வைக்குக.

3. திணை எத்தனை வகைப்படும்? அவை எவை? உதாரணத்துடன் முன்வைக்குக.

4. (அ) தெரிநிலை வினை என்றால் என்ன? உதாரணம் தருக.
   (ஆ) குறிப்பு வினை என்றால் என்ன? உதாரணம் தருக.

5. அடிப்படை மொழித்திறன்கள் எவை?

6. பேச்சுக் குறைபாடுகள் ஐந்தினைத் (05) தருக.

7. சிறுவர்களுக்குப் பாடல்கள் எழுதும்போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் ஐந்தினை (05) எழுதுக.

8. உமக்குத் தெரிந்த சிறுவர் பாடல் ஒன்றினை எழுதுக.

(08 x 05 = 40 புள்ளிகள்)

## பகுதி II

9. "தமிழ் மெய் எழுத்துக்களை பிரதானமாக மூன்று வகைப்படுத்தலாம்."

   **(i)** அந்த மூன்று வகையையும் பட்டியலிடுக.
   (03x02=06 புள்ளிகள்)

   **(ii)** ஒவ்வொரு வகையிலும் உள்ளடங்கும் எழுத்துக்களையும் எழுதுக.
   (14 புள்ளிகள்)

10. **(i)** தமிழ்மொழிக் கல்வியில் மாணவர் ஏற்படுத்தக் கூடிய சொற்பிழைகள் (வழுக்கள்) எட்டினைப் (08) பட்டியலிடுக.
   (0.5x08 =04 புள்ளிகள்)

   **(ii)** இச் சொற்பிழைகள் ஒவ்வொன்றினையும் உதாரணங்களுடன் விளக்குக.
   (02x08=16 புள்ளிகள்)

11. **(i)** வாக்கியம் என்றால் என்ன? என்பதை உதாரணத்துடன் விபரிக்குக.

(05 புள்ளிகள்)

**(ii)** தமிழ் மொழியிலுள்ள வாக்கிய வகைகளை உதாரணங்களுடன் விளக்குக.

(15 புள்ளிகள்)

12. **(i)** பிள்ளைகளின் மொழிக் கற்றல் தொடர்பாக

அ) லெவ் விகொட்ஸி

ஆ) ஜீன் பியாஜே ஆகியோரின் கருத்துக்களை குறிப்பிடுக.

(02x05=10 புள்ளிகள்)

**(ii)** பிள்ளைகளின் மொழிக் கற்றலை கணிப்பீடு செய்வதற்கு பொருத்தமான கணிப்பீட்டு முறைகள் **மூன்றினைக் (03)** குறிப்பிட்டு அவற்றினை விளக்குக.

(10 புள்ளிகள்)

13. **(i)** ஆசிரியர்கள் மாணவர்களை எவ்வாறு கற்றுக் கொள்ளலாமென சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

**(ii)** மாணவர்களைக் கற்றுக் கொள்வதால் ஆசிரியருக்கு ஏற்படும் நன்மைகள் **பத்தினைப் (10)** பட்டியலிடுக.

(08 புள்ளிகள்)

**(iii)** மாணவர்களை ஆசிரியர்கள் கற்றுக்கொள்வதால் மாணவருக்கு கிடைக்கும் நன்மைகள் **பத்தினைப் (10)** பட்டியலிடுக.

(08 புள்ளிகள்)

**-முழுப்பதிப்புரிமையுடையது-**